# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2393/36 - 2024 ජූලි මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.07.18

*2393/36 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்***

*1985 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
கொழும்பு 01.
2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2024 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. திருத்தம் செய்யப்பட்ட, 2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றன.

3. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட, 2024 யூன் மாதம் 11 ஆம் திகதிய 24/1089/604/058-I ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு 2024 மே மாதம் 31 ஆம் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய இவ் ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுகின்றன.

4. மேலே குறிப்பிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் 9 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், 'தெரிவு செய்யப்பட்ட நறுமணப் பொருட்கள் இறக்குமதி மற்றும் செயன்முறை மற்றும் எண்ணெய்ச் சாற்று வடிவு, ஒலியொரெசின் மற்றும் எஞ்சிய வடிவிலுள்ளவற்றை மீள் ஏற்றுமதி செய்யும் நடைமுறை' இன் கீழ் வெளியிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் இயைபு முறைக் குறியீட்டில் நான்கு (04) இலக்க மாற்றத்துடன் 35% உள்நாட்டு பெறுமதி சேர்த்தலுடன் மற்றும் அந் நடைமுறையின் ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் மேற்படி அவ் ஒழுங்குவிதிகளின் V ஆம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் வழங்கப்பட வேண்டும்.

| | நிரல் I<br>**இ.மு தலைப்பு** | நிரல் II<br>**இ.மு குறியீடு** | | நிரல் III<br>**விபரம்** | நிரல் IV<br>**இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம்** (L) |
|---|---|---|---|---|---|
| *4* | ***09.04*** | | | **பைப்பர் இனத்து மிளகு; உலர்த்திய அல்லது நசுக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட கப்சிக்கம் இன பிரிமென்ரா இனத்தவை படாதவை.** | |
| | | | - | மிளகு : | |
| | | *0904.11* | -- | நசுக்கவோ அல்லது அரைக்கவோ படாதவை: | |
| | | | --- | ஒரு லீற்றருக்கு 450 கிராம்களுக்கு மேற்படாத அடர்த்தியினை கொண்ட மெச்சுடியஸ் மிளகுகள்: | |
| | | *0904.11.11* | ---- | கரியச் சேர்மானமுடைய மிளகு | L |
| | | *0904.11.19* | ---- | பிற | L |
| | | | | | |
| *7* | ***09.08*** | | | **சாதிக்காய் (நட்மெக்), சாதிப்பத்திரி (மேஸ்) மற்றும் ஏலக்காய்.** | |
| | | | - | சாதிக்காய்: | |
| | | *0908.11* | -- | நசுக்கவோ அல்லது அரைக்கவோ படாதவை: | |
| | | | --- | கரியச் சேர்மானமுடைய: | |
| | | *0908.11.11* | ---- | பழுதடைந்த மற்றும் அழுகிய | L |
| | | *0908.11.19* | ---- | பிற | L |
| | | | - | ஏலக்காய்கள்: | |
| | | *0908.31* | -- | நசுக்கவோ அல்லது அரைக்கவோ படாதவை | L |

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம் (L) |
|---|---|---|---|---|---|
| | | 0908.32 | -- | நசுக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை | L |
| | | | | | |
| 8 | 09.10 | | | **இஞ்சி, குங்குமப் பூ, மஞ்சள் (குர்குமா), தைம், பன்னை இலைகள், கறி மற்றும் பிற வாசனை திரவியங்கள்.** | |
| | | | - | இஞ்சி : | |
| | | 0910.11 | -- | நசுக்கவோ அல்லது அரைக்கவோ படாதவை: | |
| | | 0910.11.10 | --- | உலரவைக்கப்பட்டவை | L |
| | | 0910.11.90 | --- | பிற | L |
| | | 0910.30 | - | மஞ்சள் (குர்குமா) : | |
| | | 0910.30.10 | --- | நசுக்கவோ அல்லது அரைக்கவோ படாதவை | L |
| | | 0910.30.90 | --- | பிற | L |

5. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களுக்கு **"செயற்பாட்டு ஆலோசனைகள்"** வழங்கப்பட வேண்டும்.

6. மேலே ஒழுங்குவிதி இலக்கம் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையில் விளக்கப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றிற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குவதுடன் தொடர்பான எந்தவொரு பிரச்சினையின் போது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும்.

7. விளக்கம்

7.1 இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக அனுமதிக்கப்பட்ட நிறுவனமெனக் கருதப்படுவது:
"முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட, 2023 டிசம்பர் 06 ஆம் திகதிய 23/2380/631/032 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2023 டிசம்பர் 18 ஆம் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய அனுமதிக்கப்பட்ட 'தேர்ந்தெடுக்கப்பட்ட நறுமணப் பொருட்கள் இறக்குமதி மற்றும் செயன்முறை மற்றும் எண்ணெய்ச் சாற்று வடிவு, ஒலியொரெசின் மற்றும் எஞ்சிய வடிவில் மீள் ஏற்றுமதி செய்யும் நடைமுறை' இன் கீழ், இயைபு முறைக் குறியீட்டின் நான்கு (04) இலக்க மாற்றத்துடன் 35% உள்நாட்டு பெறுமதி சேர்ப்புடன் செயன்முறை மற்றும் மீள் ஏற்றுமதி செய்வதற்கு, மேலே ஒழுங்குவிதி இலக்கம் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள நறுமணப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு, முதலீட்டு சபை அல்லது முதலீட்டு மேம்பாட்டு விடய அமைச்சினூடாக முதலீட்டு சபையின் சிபாரிசின் கீழ் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட எந்தவொரு நிறுவனமும்".

EOG 07-0309

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.